**கவனிக்க -** 2026.05.15 ஆந் திகதிய 2489 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2490 - 2026 මැයි මස 22 වැනි සිකුරාදා - 2026.05.22**

2490 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, மே மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B82795 - 5403 (2026/05)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## திக்வெல்ல பிரதேச சபை

### 2026.01.20 ஆந் திகதி பொதுச் சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5.1.4 ஆம் பிரேரணைப்படி ஒரு திசையில் வாகனாதிகள் பயணம் செய்தல்

261 ஆம் அதிகாரத்தின் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2014 திசெம்பர் மாதம் 12 ஆம் திகதியின் 1893 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட, திக்வெல்ல பிரதேச சபை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தென் மாகாண முதலமைச்சர் மூலம் வரைவு செய்யப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 2013.05.17 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வாகனாதிகள் தரிப்பிலிடல், கையாளுதல் பற்றி துணைவிதிகளுக்கு அமைய, கீழ் வரும் பாதை கீழ் குறிப்பிடப்படும் நேரங்களில் ஒரு திசையில் வாகனாதிகள் பயணம் செய்யப்படும் என்பதனை இத்தால் அறிவித்து பகிரங்கப்படுத்துகின்றேன்.

| *தொடர். இல.* | *விளக்கம்* | *இயக்க நேரம்* |
|---|---|---|
| *01.* | *ஹிரிகெட்டிய சந்தி தொடக்கம் பெஹெம்பிய வரை வாகனங்களை ஒரு திசையில் செலுத்துதல்* | *மு. ப. 9.00 முதல் பி.ப. 10.00 வரை* |

ருவன் விக்ரமாரச்சி,
தவிசாளர்,
திக்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்வெல்ல.
2026, மே 08.

05-275

---

# நானாவித அறிவித்தல்கள்

## திக்வெல்ல பிரதேச சபை

### விற்பனை வாகனங்கள் மூலம் கட்டணங்கள் அறவிடுவதை திருத்துதல்

திக்வெல்ல பிரதேச சபையினால் 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் 5.1.17 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் 2025.11.07 ஆம் திகதிய 2462 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் IV (ஆ) மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட 2026 ஆம் ஆண்டின் வருமான வர்த்தமானி அறிவித்தலில் 2026 ஆம் ஆண்டுக்காக வேறு கட்டணங்கள் விதிக்கப்படுவது தொடர்பாக 17 ஆம் தொடர் இலக்கத்தின் கீழ் வியாபார வாகனங்கள் மூலம் கட்டணங்களை அறவிடுவதற்காக விதிக்கப்பட்ட கட்டணம் 2026.03.17 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் 5.11.6 ஆம் இலக்க தீர்மான இலக்கத்தின் மூலம் திருத்தம் செய்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புதிய கட்டணங்கள் நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

01. வேன் வாகனம் ஒன்றுக்காக - ரூபா 100.00
02. லொறி வாகனம் ஒன்றுக்காக - ரூபா 150.00

ருவன் விக்ரமாஆரச்சி,
தலைவர்,
திக்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்வெல்ல.
2026 மே 08.

05-240

**வவுனியா மாநகர சபை**

முகாமைத்துவ குழுக்கூட்டத் தீர்மான இல. 01

வவுனியா மாநகர சபை வீதிகளை கீழ் குறிப்பிடப்படும் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் போது அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதன் பொருட்டு பின்வரும் கட்டணங்களை நிர்ணயித்து அத் தொகையினை கட்டண அறவீடாக அறவிடுவதற்கு முகாமைத்துவ குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| *தொ.இல.* | *பொருட்கள்* | *தீர்மானிக்கப்பட்ட கட்டண அறவீடு* | *அளவு* |
|---|---|---|---|
| 01. | கருங்கல் | ரூ. 250.00 | 01 கியூப் |
| 02. | கிரவல் | ரூ. 250.00 | 01 கியூப் |
| 03. | மணல் | ரூ. 250.00 | 01 கியூப் |
| 04. | மக்கி | ரூ. 250.00 | 01 கியூப் |
| 05. | குளமண் / களிமண் | ரூ. 250.00 | 01 கியூப் |

சிவரஞ்சினி சிவச்செல்வன்,
மாநகர ஆணையாளர்,
வவுனியா மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
வவுனியா.

05-287

---

**மண்முனை மேற்கு பிரதேச சபை**

சேவைக் கட்டணங்கள் விதித்தல் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தல் - 2026

மண்முனை மேற்கு பிரதேச சபையினால் 2026 ஆம் ஆண்டின் 04 ஆம் மாதம் 30 ஆம் திகதிய சபை தீர்மான இலக்கம் 209/2026 இன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

திரு. த. கோபாலபிள்ளை,
தவிசாளர்,
மண்முனை மேற்கு பிரதேச சபை.
வவுணதீவு.

மண்முனை மேற்கு பிரதேச சபை,
வவுணதீவு,
2026 மே 08.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 3 பிரகாரம் பொதுப் பயன்பாட்டு சேவைகளை பராமரிப்பது மற்றும் அனைத்து வசதிகளையும் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியன பிரதேச சபைகளின் செயற்பாடுகளாக

தீர்மானிக்கப்பட்டுள்ளன. எனவே 2026 ஆம் ஆண்டில் வவுணதீவு பொதுச்சந்தையினுள் சேவைகளை வழங்குவது தொடர்பாகப் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை விதித்து அறவிடுவதெனவும் இவ் நடைமுறைகளை பின்பற்றுவதெனவும் மண்முனை மேற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

**வவுணதீவு பொதுச்சந்தை நடைமுறைகள்**

எமது பிரதேச சபைக்கு சொந்தமான வவுணதீவு பொதுச்சந்தையின் உள்ளக மற்றும் வெளியக வியாபாரங்களை ஒழுங்கு படுத்தும் நோக்குடன் கீழ் குறிப்பிடப்படும் தகவல்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

01. வவுணதீவு பொதுச்சந்தையின் வாயில் கதவின் வெளிப்பகுதியில் இருந்து பிரதான வீதியில் கிழக்கு பக்கமாக உழவர் நிலைச்சந்தி (சுற்று வட்டாரம்) வரை 116 மீற்றர் தூரம் வரைக்கும் மேற்கு பகுதியில் பொலிஸ் நிலைய சந்தி சுற்று வட்டம் 102 மீற்றர் வரைக்கும் பிரதான வீதியின் இருபக்கமும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படா வகையில் சந்தை நாட்களில் வியாபாரத்தில் ஈடுபட முடியும்,

02. வவுணதீவு பொதுச்சந்தை ஒவ்வொரு செவ்வாய் தினத்தில் நடைபெறுவதோடு வியாபார தன்மையின் அடிப்படையில் சந்தையின் உள்ளும் வெளியிலும் இட ஒதுக்கீடுகள் கீழ் குறிப்பிடப்படும் அடிப்படையில் வழங்கப்படும்.

சந்தையினுள் இட ஒதுக்கீடு அளவுகள் (ஒரு கடையின் அளவு)

| *தொ. இல.* | *வியாபாரத்தின் தன்மை* | *அளவுகள்* | *கட்டணம்* |
|---|---|---|---|
| 01 | மரக்கறி வியாபாரம் | 10 x 7 | 200.00 |
| 02 | பலசரக்கு | 10 x 10 | 200.00 |
| 03 | ஆடைகள் | 10 x 10 | 200.00 |
| 04 | அலங்கார பொருட்கள் | 10 x 10 | 200.00 |
| 05 | கருவாடு | 7 x 5 | 100.00 |
| 06 | வெற்றிலை விற்பனை | 7 x 5 | 100.00 |
| 07 | பழங்கள் விற்பனை | 10 x 7 | 100.00 |
| 08 | பாதணிகள் விற்பனை | 10 x 7 | 100.00 |

சந்தையின் வெளிப்பகுதிகள் மற்றும் வீதியோரங்களில் இட ஒதுக்கீடு அளவுகள் (ஒரு கடையின் அளவு)

| *தொ. இல.* | *வியாபாரத்தின் தன்மை* | *அளவுகள்* | *கட்டணம்* |
|---|---|---|---|
| 01 | மரக்கறி வியாபாரம் | 10 x 5 | 200.00 |
| 02 | பலசரக்கு | 10 x 5 | 200.00 |
| 03 | ஆடைகள் | 10 x 5 | 200.00 |
| 04 | அலங்கார பொருட்கள் | 10 x 5 | 200.00 |
| 05 | கருவாடு | 7 x 5 | 100.00 |
| 06 | வெற்றிலை விற்பனை | 7 x 5 | 100.00 |
| 07 | பழங்கள் விற்பனை | 10 x 5 | 100.00 |
| 08 | பாதணிகள் விற்பனை | 10 x 5 | 100.00 |

03. ஒரு வியாபாரிக்கு ஒரு கடையே வழங்கப்படும் என்பதுடன் சக உதவியாளர்கள், உறவினர்கள் ஊடாக மேலதிக கடைகள் கோருவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மேலதிகமாக கடை தேவைப்படும் பட்சத்தில் குத்தகைகாரருடன் பேசி பெற்றுக்கொள்ளவேண்டும் அவ்வாறு மேலதிக கடை கிடைக்கப்பெறாத பட்சத்தில் எமக்கு எழுத்து மூலம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலதிக கடை வழங்குவது தொடர்பான இறுதித் தீர்மானம் சபையினால் மேற்கொள்ளப்படும்.

04. சந்தையினுள் எவருக்கும் நிரந்தர கடைகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் வருகை முன்னுரிமை அடிப்படையில் கடைகள் வழங்கப்படும்.

05. சந்தையினுள் வியாபாரிகள், பொதுமக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் சந்தை குத்தகைக்காரன் ஊடாக சபைக்கு எழுத்து மூலம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு குத்தகை காரர் தொடர்பான முறைப்பாடுகள் சபைக்கு எழுத்து முலம் நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. சந்தைக்கு முந்தைய இரண்டு நாட்கள் சந்தையை அண்மித்த பகுதிகளில் நடமாடும் வியாபாரங்கள் மேற்கொள்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

07. சந்தை வளவுக்குள் நிருமாணிக்கப்பட்டுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள எந்தவொரு சொத்துக்கும் சேதம் ஏற்படும்வகையில் எவரும் எவ்வகையிலேனும் மேற்கொள்ளல் கூடாது.

08. சந்தைப் பிரதேசத்துக்குள் பின்வரும் எந்தச் செயற்பாட்டையும் மேற்கொள்வது கூடாது.

(அ) பொதுமக்கள் பொருட்களை வாங்குவதற்கென நடந்து செல்ல ஒதுக்கப்பட்டுள்ள வழிகளில் பொருட்களை விற்பனை செய்தல், காட்சிப்படுத்துதல் அல்லது ஏதும் பொருட்களை வைத்திருத்தல் கூடாது.
(ஆ) யாசகம் கேட்டல்
(இ) முறைகேடாக நடந்துகொள்ளல் அல்லது ஏனையோருக்கு எவ்வகையிலேனும் தொல்லை ஏற்படுத்துதல்.

09. மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறும் வியாபாரிகள் எவ்வித அறிவித்தலும் இன்றி சந்தையினுள் இருந்து வெளியேற்றப்படுவர்.

10. பொதுச்சந்தையின் மேற்பார்வை ஒழுங்குபடுத்தல் கட்டுப்படுத்தல் அதிகாரம் பிரதேச சபைக்கே உள்ளமையினால் சந்தையின் அனைத்து இறுதி தீர்மானங்களும் நடைமுறைகளும் பிரதேச சபையினாலே மேற்கொள்ளப்படும் என்பதோடு அனைத்து வியாபாரிகளும் இத் தீர்மானங்களுக்கு கட்டுப்பட வேண்டும்.

11. சந்தை வளவுக்குள் இந்தத் துணை விதிகளின்படி சந்தையின் வியாபார நடவடிக்கைகள் நடைபெறுகின்றனவா என்பதைப் பரிசோதிக்கவும், கண்காணிக்கவும் தலைவர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்கள் எந்த வேளையிலும் வருகை தருவது சட்டபூர்வமானதாக அமையும். அவ்வாறு செயற்படும் சந்தர்ப்பங்களின்போது அவர்களைத் தடுத்தல் அல்லது அதனைத் தவிர்க்கும் வகையில் எவரும் செயற்படுதல் கூடாது.

05-262

---

**அக்மீமன பிரதேச சபை**

வீதி சேதம் மற்றும் சேவைக் கட்டணங்கள் குறித்த அறவிப்பு

அக்மீமன பிரதேச சபையின் 2026.05.08 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தீர்மானம் இலக்கம் 06.01.01 இன் கீழ் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை இதன்மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

எம். எச். சுகத் ஆனந்த,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்மீமன,
2025 மே 04.

**தீர்மானம்**

அக்மீமான பிரதேச சபையால் பராமரிக்கப்படும் நீர் திட்டங்களின் அத்தியாவசிய சேவைகளை நுகர்வோருக்குத் தொடர்ந்து வழங்குவதற்கும், அத்திட்டங்களை இலாப நட்டமற்ற ஒரு மட்டத்தில் பராமரிப்பதற்கும், 2025.11.21 ஆந் திகதி 2464 ஆம் இலக்கம் உடைய வர்த்தமானப் பத்திரிகை மூலம் 2026 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்ட நீர்க் கட்டணங்களை 2026.06.01 ஆந் திகதி முதல் செயல்படுத்துவதற்கு பின்வரும் அலகுகள் மற்றும் கட்டணங்களின்படி திருத்தி வசூலிப்பது பொருத்தமானது என்று சபைக்கு நான் முன்மொழிகிறேன்.

| *அலகுகளின் எண்ணிக்கை* | *பயன்பாட்டுக் கட்டணம்* | *மாதாந்த சேவைக் கட்டணம்* |
|---|---|---|
| | *ரூ. /அலகு* | *ரூபா சதம்* |
| 00-05 | 50 | 300.00 |
| 06-10 | 70 | 300.00 |
| 11-15 | 90 | 300.00 |
| 16-20 | 100.00 | 400.00 |
| 21-25 | 120.00 | 500.00 |
| 26-30 | 150.00 | 600.00 |
| 31-40 | 170.00 | 1500.00 |
| 41-50 | 195.00 | 3000.00 |
| 51-75 | 225.00 | 3500.00 |
| 76-100 | 250.00 | 4000.00 |
| 100 க்குமேல் | 280.00 | 4500.00 |

05-321